In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.27 (L.W.51)

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.Shameema | Caste | : BCM |
| Father's Name | : I.Jaleel | Calling | : Doctor |
| Village | : Madras | Religion | : Muslim |
| Taluk | : Madras | Age | : 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 30.01.2025.

(A2 to A6 present. A1 absent and his absence condoned on filing u/s 317 of Cr.P.C. petition)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் 02.40 P.M.**

நான் தற்போது சென்னை இராஜிவ்காந்தி மருத்துவமனையில் மேற்படிப்பில் எம்.டி.ஆர்.டீ படித்து வருகிறேன். கடந்த 2014 ஜுலை முதல் 2015 செப்டம்பர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரியில் நுண்கதிர் பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்துபோது 22.06.2015 அன்று நான் பணியில் இருந்தபோது ஷமீல் பாஷா 26 வயது என்பவருக்கு நுண்கதிர் படங்கள் எடுக்குமாறு அனுப்பப்பட்டார்.

அவருக்கு வலது கை முதுகு எலும்பு, மார்பக பகுதி மற்றும் இடது தோள்பட்டையில் நுண்கதிர் படங்கள் எடுக்கப்பட்டன. அந்த நுண்கதிர் படங்களை பார்த்து எந்த வகையான எலும்பு முறிவு ஏற்படவில்லை என்று கருத்து தெரிவித்தேன்.

பின்பு அதை குறித்து அதே வருடம் ஜூலை மாதம் 30ம் தேதி சிபிசிஜடி போலீசாரிடம் நான் பணியில் இருக்கும்போது என்னை விசாரித்தபோது அந்த நுண்கதிர் படங்களை பார்த்து நான் என்ன கருத்து அளித்தேனோ அதை கூறினேன். என்னிடம் காண்பிக்கப்படும் எக்ஸ்ரே அறிக்கை நான் வழங்கியதுதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது அ.த.சா.ஆ.50.

**1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நுண்கதிர் படம் எடுக்க நோயாளி வரும்போது அவருடன் மருத்துவமனை ஊழியர் யாரேனும் வர வேண்டும் என்றால் சரிதான். நுண்கதிர் படம் எடுக்க நோயாளியை யார் பரிந்துரை செய்தார்கள் என்ற விவரத்தை அ.த.சா.ஆ.50 ல் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அவருடைய பெயர் எதையும் ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை.

நான் எடுத்த நுண்கதிர் படங்களை case sheet உடன் இணைப்பதில்லை. நுண்கதிர் படங்கள் எடுத்து நோயாளிக்கோ அல்லது case sheet–ல் இணைப்பதில்லை. அதனுடைய கருத்துக்களை மட்டுமே case sheet ல் பதிவு செய்வோம். Reference Number மட்டுமே case sheet ல் பதிவு செய்வோம்.

அந்த காலகட்டத்தில் எடுத்த நுண்கதிர் படங்களை டிஜிட்டல் என்றால் அது Conventional xray. Conventional xray–கள் அனைத்தும் ஸ்கேன் செய்யப்பட்டு Computer Digitalise செய்யப்பட்டு என்றால் அவ்வாறு டிஜிட்டல் செய்வதில்லை. 2015–ல் Computer Digitalise இருந்ததா என்றால் இருந்தது.

அவசர சிகிச்சை பிரிவில் உள்ள ஒருவருக்கு நுண்கதிர் படம் எடுத்த பின்பு அந்த கருத்து அவசர சிகிச்சை பிரிவுக்கு தெரிவிக்கப்படுமா என்றால் அதனுடைய conventional copy கொடுப்போம் மீண்டும் அது நுண்கதிர் பிரிவுக்கு வந்துவிடும். நுண்கதிர் படம் எடுக்கும்போது சாதாரணமாக உள்ள தசைக்கும் பாதிக்கப்பட்ட தசைக்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் contusion வீக்கம் இருந்தால் கணிக்க முடியாது.

பாதிக்கப்பட்ட தசையாக இருந்தால் தெரியுமா என்றால் தெரியாது. Opinion தரும்போது Conventional Xray இணைத்து தருவோமா என்றால் தருவோம். போலீசார் விசாரணையிலும் நான் என்னுடைய Conventional Xray ஆகியவற்றை பார்த்துதான் வாக்குமூலம் கொடுத்தேன். நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தை போலீசார் நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள்.

அ.த.சா.ஆ.50 அசல் ஆவணம் அல்ல நகல்தான் என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய்யான சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலீசார் விசாரணையில் உண்மை ஆவணங்களை வைத்துதான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரிதான்.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

நான் நுண்கதிர் படம் எடுத்த தேதியில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தேன். நான் உதவி பேராசிரியராக இருக்கும்போது என்னுடைய பணி என்ன என்றால் என்னிடம் வரும் நோயாளிகளுக்கு நுண்கதிர் படம், சிடி ஸ்கேன், எம்ஆர்ஐ, அல்ட்ரா ஸ்கேன் ஆகியவற்றை எடுப்பது. நான் மருத்துவமனையில் பணிபுரிவேனா, கல்லூரிக்கு பாடம் எடுக்க செல்வேனா என்றால் என்னுடைய பணி மருத்துவமனையில் மட்டும்தான். மருத்துவ கல்லூரி மாணவர்கள் எங்களிடம் செய்முறைக்காக மருத்துவமனைக்கு வருவார்கள் அவர்களுக்கு சொல்லிகொடுப்போம். Patient care, research, teaching ஆகியவைகள் குறித்து மாணவர்களுக்கு பாடம் எடுப்பேன்.

ரேடியாலஜி துறையில் அங்கு ஸ்கேன் ஆகியவை எடுப்பதற்கு வேறு ஒரு பணியாளர் இருப்பார் என்றால் சரிதான். பரிசோதனை குறித்து அங்கு பணி மருத்துவர் அறிவுறுத்தலின் பேரில்தான் நுண்கதிர் படங்கள் எடுக்கப்படும் என்றால் சரிதான். மருத்துவர் எடுத்து கொடுக்கும் நோயாளிகளுக்கு ஸ்கேன் ஆகியவை எடுத்து அதை வைத்து மாணவர்களுக்கு பாடம் எடுப்போம் என்றால் சரிதான்.

மருத்துவமனையில் நான் பணியாற்றுவதற்கு Duty Roster தனியாகவும் கல்லூரிக்கு பாடம் எடுக்க தனி Attendance இருக்குமா என்றால் எங்களுக்கு மருத்துவமனையில் மட்டுமே வருகை பதிவேடு பராமரிக்கப்படும்.

நான் பேராசிரியராக இருந்தாலும் மருத்துவ கல்லூரியில் தனியாக Attendance கிடையாது. சிபிசிஐடி போலிசாரிடம் நான் அன்றைய தினம் பணியில் இருந்ததற்கான duty register ன் நகலையோ அது குறித்த ஆவணங்களை கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை ஆனால் நான் அங்குதான் அன்று பணியில் இருந்தேன்.

நான் பணியில் இருந்த அன்று அங்கு பணி மருத்துவர் இருந்தாரா என்றால் இருந்தார். நுண்கதிர் படம் எடுக்க பரிந்துரை செய்த மருத்துவரின் கையொப்பம் அ.த.சா.ஆ.50–ல் உள்ளதா என்றால் மற்ற பகுதியில் உள்ளது நான் கொடுத்த பகுதியில் இல்லை. அ.த.சா.ஆ.50 ல் வார்டு Medical Officer Signature என்ற இடத்தில் என்னுடைய கையொப்பம் இல்லை. அது யாருடைய கையொப்பம் என்றால் எனக்கு நினைவில்லை.

22.06.2015 அன்று இருந்த Medical Officer–ன் கையொப்பமா என்றால் நினைவில்லை. அ.த.சா.ஆ.50 ல் Attested xrox என்று கையெழுத்திட்டுள்ள மருத்துவரின் பெயர் தெரியாது அது யார் என்று ஞாபகமில்லை. அ.த.சா.ஆ.50 பகுதி 1–ல் (Part 1) உள்ளது கையொப்பம் என்னுடைய சுருக்கொப்பம் தான். அ.த.சா.ஆ.50 பகுதி 1–ல் என்னுடைய சுருக்கொப்பத்தின் கீழ் மருத்துவமனையின் முத்திரை இல்லை என்றால் சரிதான்.

அ.த.சா.ஆ.50 பகுதி 2–ல் Medical Officer என்பதின் கீழ் 25.06.2015 என்று தேதி குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் எக்ஸ்ரே மட்டும்தான் எடுத்தேன். யார் சொல்லி எக்ஸ்ரே எடுக்கப்பட்டது அந்த மருத்துவரின் பெயர் நினைவில்லை.

அ.த.சா.ஆ.50–ல் Medical Officer மற்றும் Assistant Professor என்ற இடத்தில் உள்ள attested கையொப்பமும் யாருடையது என்று எனக்கு தெரியாது. அ.த.சா.ஆ.50–ல் பகுதி 1–க்கு மேலே உள்ள விவரம் என்னுடையதா என்றால் வார்டில் உள்ள மருத்துவர் எழுதியிருப்பார்.

இன்று நீதிமன்றத்திற்கு வரசொல்லிதான் எனக்கு சம்மன் வந்தது. நீதிமன்றத்திற்கு வருவதற்கு என்னுடைய மேல் அதிகாரியிடம் அனுமதி கடிதம் பெற்றுதான் வந்தேன் ஆனால் அந்த அனுமதி கடிதத்தை எடுத்து வரவில்லை. நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வரும்போது அசல் ஆவணங்களை எடுத்துவர வேண்டும் என்றால் எடுத்து வரவில்லை அதற்கான காரணம் நான் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு சென்று நான் விசாரித்தபோது அங்கு அரசு கடிதத்தின் வாயிலாக அசல் ஆவணங்கள் அழிக்கப்பட்டதாக கூறினார்கள் எனவே கொண்டு வரவில்லை.

சிபிசிஐடி போலீசார் 30.07.2015 அன்று என்னை விசாரித்தார்கள். சிபிசிஐடி போலீசாரிடம அசல் ஆவணங்கள் அழிக்கப்பட்ட விவரத்தை கூறினேனா என்றால் அப்போது அசல் ஆவணங்கள் இருந்தது. அசல் ஆவணங்கள் எந்த வருடம் அழிக்கப்ட்டன என்றால் தெரியாது. நீதிமன்றத்தில் அசல் ஆவணங்களை கொடுத்தேனா என்றால் இல்லை.

என்னுடன் பணி புரிந்த Assistant Professor பெயர் விவரம் தெரியுமா என்றால் சில பெயர்களை தெரியும். அவர்கள் எலும்பு முறிவு மருத்துவர் வினோத்ராஜ்குமார், நரம்பியல் மருத்துவர் ரம்யா, அறுவை சிகிச்சை மருத்துவர் சரவணகுமார்.

என்னுடன் பணிபுரிந்த பணி மருத்துவர்கள் 22.06.2015 அன்று எவ்வளவு நேரம் பணிபுரிந்தார்கள் என்றால் காலை 07.30 மணிமுதல் மதியம் 2 மணிவரை. எல்லா உதவி பேராசிரியர்களின் பணி நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது என்றால் Patient care and treatment.

வாரத்திற்கு உதவி பேராசிரியர்களுக்கு பணி நேரம் 42 மணி நேரம் முதல் 60 மணி நேரம் என்றால் எனக்கு சரியான கால அளவு நினைவில்லை. பணி மருத்துவருக்கு மட்டுமே நோயாளியின் பெயர் மற்றும் அவர்களின் விவரம் தெரியும் என்றால் எங்களுக்கும் அவர்களின் விவரம் தெரியும்.

சிபிசிஐடி போலீசாரிடம் நான் எடுத்த எக்ஸ்ரே அறிக்கை மற்றும் நுண்கதிர் படம் ஆகியவற்றை கொடுத்தேனா என்றால் எக்ஸ்ரே அறிக்கையை பார்த்து சொன்னேன். நுண்கதிர் படம் கொடுக்கவில்லை. என்னுடைய பணி நுண்கதிர் படம் எடுப்பது மட்டும்தானா என்றால் இந்த வழக்கை பொறுத்து நுண்கதிர் படம் எடுத்தது மட்டும்தான். அ.த.சா.ஆ.50 ல் 25.06.2015 அன்று கையெழுத்து போட்ட மருத்துவ அதிகாரியின் பெயர் மற்றும் விவரம் தெரியும் என்றும் பொய்யான ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.55 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.30 16:38:17 +0530